இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 196 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – மாசி 14 – வியாழக்கிழமை 26 பிப்ரவரி 2026 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:84 - Issue 196: Thiruvalluvar Year - 2057 - Maasi 14 - Thursday 26 February 2026 - Trichy ★★ 16 Pages ₹ 5.00




# கல்வியில் சிறந்த தமிழ்நாடு புதிய உயரங்களை அடைவதில் பெருமிதம் கொள்வோம்!



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.2.2026) கன்னியாகுமரி கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில், கல்லடிவிளையில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது, பால்வளத்துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ஆர். மகேஷ், தமிழ்நாடு மாநில உணவு ஆணையத் தலைவர் சுரேஷ் ராஜன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ஆஸ்டின், முன்னாள் எம்.பி. திருமதி ஹெலன் டேவிட்சன், புத்தளம் பேரூர் செயலாளர் எஸ்.பிரதாப் சிங் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, பிப். 26 -**

**கல்வியில் சிறந்த தமிழ்நாடு - புதிய உயரங்களை அடைவதில் பெருமிதம் கொள்வோம் என்று ஐ.ஐ.டி.யில் நுழைவதற்கான முதற்படியை அரசு மற்றும் மாதிரிப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் வெற்றிகரமாகக் கடந்துள்ளது குறித்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலை தளப் பதிவு வருமாறு:-

தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் (Tamil Nadu Model Schools): கல்வியில் சிறந்த தமிழ்நாடு புதிய உயரங்களை அடைவதில் பெருமிதம் கொள்வோம்!

கல்வியால் சிறக்கும் நமது அரசுப் பள்ளி மாணவர்களைச் செய்தித்தாள்களின் முதல் பக்கத்தில் இடம்பெற வைத்துப் பூரிப்படைகிறோம்.

2021-2022இல் கல்வியில் பின்தங்கிய 10 மாவட்டங்களில் தொடங்கப்பட்ட மாடல் பள்ளிகள், இன்று 38 மாவட்டங்களிலும், தலா ரூ.50 கோடி மதிப்பீட்டில் 800 மாணவர்களுக்கான உறைவிட, உட்கட்டமைப்பு வசதிகளுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

அதனால்தான், கடந்த 4 ஆண்டுகளில் அரசு மற்றும் அரசு மாதிரிப் பள்ளிகளைச் சேர்ந்த 2,358 மாணவர்களும், ஆதிதிராவிடர் (37) மற்றும் பழங்குடியினர் (169) பள்ளிகளைச் சேர்ந்த 206 மாணவர்களும், 93 முன்னணி உயர்கல்வி நிறுவனங்களில், 50 துறைகளில் மேற்படிப்பு பயிலுகின்றனர். அதில் 41 பேர் IITகளிலும், 22 பேர் முழு உதவித்தொகையுடன் வெளிநாடுகளிலும் பயில்கின்றனர்.

இதன் தொடர்ச்சியாக, இந்த ஆண்டு ஐ.ஐ.டி.யில் நுழைவதற்கான முதற்படியை அரசு மற்றும் மாதிரிப் பள்ளிகளைச் சேர்ந்த 448 மாணவர்களும் ஆதி திராவிடர் (13) மற்றும் பழங்குடியினர் (55) பள்ளிகளைச் சேர்ந்த 68 மாணவர்களும் வெற்றிகரமாகக் கடந்துள்ளனர்.

பெரும்பாலும் முதல் தலைமுறையினராகக் கல்விச் சாலைக்குள் நுழைந்த இந்த மாணவர்களின் கனவுகளை அடைவதற்குத் துணை நிற்கின்ற பெருமையோடு, இவர்களை முன்னுதாரணமாகக் கொண்டு இன்னும் பலர் கல்வியைக் கைப்பற்றிக் கொண்டு, உன்னதமான உயரங்களை வாழ்வில் அடைந்திட வாழ்த்துகிறோம்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

# வெல்லும் தமிழ்ப் பெண்கள் !

## ‘ஸ்டாலினின் மகளிர் படை’ வீடு வீடாக பரப்புரை!

## ‘ஸ்டாலின் பஸ்’ மூலம் ஒவ்வொரு மகளிரும் ரூ.60,000 வரை சேமித்துள்ளனர்!







**சென்னை, பிப். 26 -**

**தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொண்டு வெற்றி பெறும் வகையில் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் ஸ்டாலினின் மகளிர் படையினர் முன்னெடுத்து வரும் வெல்லும் தமிழ்ப் பெண்கள் பரப்புரை தமிழ்நாடு முழுக்க உற்சாகத்தோடு முன்னெடுக்கப்பட்டு வருகிறது. 23-2-2026 அன்று 32,759 வாக்குச்சாவடிகளில் தொடங்கிய பரப்புரையானது நேற்று முன்தினம் மேலும் 13,174 வாக்குச்சாவடிகள் இணைந்து மொத்தம் 45,933 வாக்குச்சாவடிகளில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் ஸ்டாலினின் மகளிர் படையினர் நேரடியாக சென்று பரப்புரை செய்து வருகின்றனர்.**

இன்றைய பரப்புரைக் கூட்டத்தின் மையமாக திராவிட மாடல் அரசு ஆட்சிக்கு வந்த முதல் நாள் முதலமைச்சர் அவர்களால் முதல் கையெழுத்திடப்பட்ட மகளிருக்கான கட்டணமில்லா விடியல் பேருந்து பயணம் திட்டம் மகளிர் வாழ்க்கைக்கு எவ்வாறெல்லாம் பயன்பட்டு வருகிறது என ஸ்டாலினின் மகளிர் படையினர் எடுத்துக் கூறினர்.

பெண்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் விடியல் பேருந்தை ஸ்டாலின் பஸ் என்றே பெண்கள் அனைவரும் அழைக்கின்றனர். சுமார் 70 லட்சம் மகளிர்கள் விடியல் பேருந்தில் நாள்தோறும் பயணித்து பயனடைந்து வருகின்றனர். இதுவரை 855 கோடி முறை பெண்கள் பயணம் செய்துள்ளனர். ஒவ்வொரு மகளிரும் ஸ்டாலின் பஸ் மூலம் ரூ.60,000 வரை சேமித்துள்ளனர். இந்த சேமிப்பு பணம் ஒவ்வொரு குடும்பத்தின் மருத்துவ செலவு, கல்வி செலவு, அவசர தேவைக்கு, நீண்ட கால சேமிப்புக்கு என பலவகையில் பயன்பட்டு பெண்களின் பொருளாதார சுதந்திரத்தையும், சுயமரியாதையையும் உறுதி செய்துள்ளது. திராவிட மாடல் அரசினால் செயல்படுத்தி வரும் திட்டங்கள் பெண்கள் நலத் திட்டங்கள் மட்டுமல்ல; அவை பெண்கள் முன்னேற்றத் திட்டங்கள். என்பதை அனைத்துப் பெண்களிடமும் விளக்கி கூறப்பட்டது.

ஸ்டாலினின் மகளிர் படை ஒவ்வொரு வீட்டிற்கும் செல்லும் போது அங்குள்ள மகளிர் அன்போடு வரவேற்று டீ, காபி கொடுத்து உபசரிப்பதை பெரும்பாலான இடங்களில் பார்க்க முடிந்தது. ஒவ்வொரு குடும்பமும் திராவிட மாடல் அரசின் ஏதாவது ஒரு திட்டத்தால் பயனடைந்து வருவதாக பெரும்பாலான வீடுகளில் தெரிவித்தனர்.

வெல்லும் தமிழ்ப் பெண்கள் - ஸ்டாலினின் மகளிர் படை வீடு வீடாக பரப்புரை மேற்கொள்வதற்கு தமிழ்நாடு எங்கும் நல்ல வரவேற்பு கிடைத்து வருகிறது.





